# அன்பு பெருக்கத்தில் நனைதல்

முதா கராத்த மோதகம்

சாதாவி முக்தி சாதகம்

கலாதராவ தம் சகம்

விநாசி லோக ரஷகம்

அநாய கைக நாயகம்

விநாசி தேப்ரதைத்யகம்

நதாசுபாசு நாயகம்

நமா மமிதம் விநாயகம்...

வராது வந்த நாயகன்

சுகானுபாவம் தந்தவன்

அனாதியாகி நின்றவன்

அயோதி ராம ரூபகன்

விநோதகன் விநாயகன் என்

யோகிராம் சுரத்குமாரன்

நாதவேள்வி நாரதன்

சமாதி பாவ பூர்வரன்

இதந்தரும் சொல்வல்லவன்

சதம் எனுள் நிறைந்தவன்

தபோவனன் தயாபரன்-என்

யோகிராம் சுரத்குமாரன்

நாம வேள்வி காரணன்

ராம நாம தாரகன்

வரம் தரும் சுரேஸ்வரன்

நிரந்தரம் நிறைந்தவன்

நிலா மலர்ந்த பூமியாய்

உலா வரும் பிராபகரன்

விலாசமின்றி சாமியாய்

வளர்ந்த ஞான போதகன்

உன்னோடு நான் என்னோடு நீ

எல்லாம் ஒன்றாய் கலந்தென்ற

நீதி பேசும் ஈஸ்வரன்

ஜோதி ரூப மாதவன்...... (வராது வந்த)